# திருவருகைக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

திருவருகைக்காலத்தின் மூன்றாம் வாரத்தின் தொடக்க நாளாகிய இன்று இந்த ஞாயிறு வழிபாட்டிற்கு உங்களை அன்புடனே வரவேற்கின்றோம்.

இந்த வாரத்தை 'மகிழ்ச்சியின்' வாரமென்று அழைப்பது உண்டு. மெசியாவின் வருகை மகிழ்ச்சியைத் தரும் என்ற நம்பிக்கையை பெற்றுக் கொள்ளவும், அவருடைய பணிவாழ்வில் மக்கள் மகிழ்வு கொண்டனர் என்பதனையும் இறைவாக்குகள் எடுத்துரைக்கின்றன. மகிழ்ச்சி ஆவியின் கனியே. கலா 05: 22

என்ன பார்க்கின்றீர்களோ, என்ன கேட்கின்றீர்களோ அதனையே போய் சொல்லுங்கள் என்கிறார். என்ன பார்த்தார்கள், பார்வை பெற்றனர். நடந்தனர். நலம் பெற்றனர். இதனால் மகிழ்வு கிட்டியது.

இன்றைக்கு இதனை தெரியப்படுத்துபவர்களும், அந்த நற்செய்தியை கேட்பவர்களும் மகிழ்வு அடைவர். கேட்போம், அறிவிப்போம், மகிழ்வு அடைவோம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. இந்த ஆண்டிலே மகிழ்ச்சியின் அடையாளமாக திகழும் எமது திருத்தந்தையை ஆசீர்வதியும். அவர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் உம் இறையருள் நிறைவாக இருந்திடவும், பூரண நலம் அருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நாட்டின் நலனிலே அக்கறை கொண்டு செயல்படும் அன்பர்களை ஆசீர்வதியும். அவர்களை பாதுகாத்து, பராமரித்து, எழும் அச்சத்திற்கு அவர்கள் அடிபணியாது பயணிக்க அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஊனங்களின் மத்தியிலும், புன்னகையைச் சொத்தாக்கி உள்ள அன்பர்களை ஆசீர்வதியும். அவர்களது மகிழ்ச்சி அவர்களுக்கு அக விடுதலை தந்து, நம்பிக்கையுடனே அவர்கள் பயணம் இனிதாகிட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. பலியிலே பங்கேற்கும் நாங்கள் மகிழ்ச்சியை எங்களது ஆடையாக கொண்டு, அந்த மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டு மன இறுக்கங்களில் இருந்து நாங்களும், மற்றவர்களை விடுவிக்கின்ற வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. மகிழ்வின் அற்புத நிகழ்வுகளை கேட்கும், பார்க்கும் நாங்கள், வெறும் பார்வையாளர்களாக இல்லாமல், அதனை மற்றவர்களோடு பரிமாறிக் கொள்ளும் தூதுவர்களாக செயலாற்றிட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com